23

வீடு

"சாருக்கு எவ்வளவு தூரமோ...?"

என் எதிரில் புதுசாக வந்து உட்கார்ந்தவர்தான் கேட்டார். இடம்: ஒரு பாஸஞ்சர் வண்டியின் பழைய பெட்டி. திருவண்ணா மலை ஸ்டேஷனில் வண்டி நின்று கொண்டிருந்தது.

பெட்டியில் நானும் என் நண்பரும், நடுத்தர வயசுள்ள இரண்டு ஆண்களும், அந்தப் புதிய நபரும்தான் இருந்தோம்.

வெயில் ஏறிக்கொண்டிருக்கிற. அவ்வளவாகப் புழுக்கம் இல்லை. நான் அவருக்குப் பதில் சொன்னேன்—

'வேலூர் வரைக்கும்...'

'நான் ரொம்ப தூரம் போகணும் சார்...' என்று கூறிக் கொண்டே மேலே சாமான்கள் வைக்கும் பலகையைப் பார்த்தார்.

வண்டி நகர ஆரம்பித்தது.

நான் அந்தப் புதியவரை நோட்டம் விட்டேன்.

ஒரு சாதாரண வெள்ளைச் சட்டையும் காக்கிப் பேண்ட்டும் அணிந்திருந்தார். ஆறடி உயரம். நன்றாக வளர்ந்த உடல். வயசுக்கு மீறி முதுமை கொண்ட முகம். 'ஷா' மாதிரி நெற்றி. நாலைந்து ஓடைகள் எனப் பிளவு. அடுக்கடுக்காக நேர்ந்த பல்வேறு அனுபவங் களே அதற்குக் காரணமாகவும் இருக்கக்கூடும்.

எனக்கு உற்சாகம் பிறந்தது. அவரோடு பேசவும் ஆசை எழுந்தது. பார்ப்பவரைப் பேசவைக்கும் முகம் அவருக்கு. அவருக் குமே அப்படி இருந்திருக்கலாம்...

'சாருக்கு ஆபீஸ் உத்யோகமா...' அவர் கேட்டார்.

'இல்லை... வாத்தியார்...' நான் சொன்னேன்...

'டீச்சரா... நிம்மதியான உத்யோகம்தான்... நேரத்துக்கு வேலை... நெறைய லீவு...' சிரித்துக் கொண்டே அவர் சொன்னார்.

நான் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவருக்கு மட்டு மென்ன! இந்த நாட்டில் ரொம்பப் பேர் அப்படித்தானே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்...

நான் சிரித்து மழுப்பினேன்— எங்களுக்குள் நல்ல சுமூகம் ஏற்பட்டது. அவர் ஒரு சிசர்ஸ் சிகரெட் பாக்கெட்டை எடுத்து என்முன் நீட்டி, 'எடுத்துக்குங்க' என்றார்.

நான் அதை மறுத்துவிட்டு, என் 'சார்மினார்' ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டேன்.

'நான் மிலிட்டரியில் இருக்கேன் சார், ஸோல்ஜர்...' அவர் கூறினார்.

'அப்படியா... ரொம்ப சந்தோஷம்... என் மாமாகூட மிலிட்டிரியில் இருக்கிறவர்தான்... எனக்கு மிலிட்ரி பீப்பில்ஸ் மேல ரொம்பவும் மதிப்பு உண்டு சார்...' என்றேன்.

ஏற்கனவே என் மாமா, அவர் பாணியில் இராணுவ வீரர்களின் தியாகங்களையும், துணிவையும் பல்வேறு நிகழ்ச்சிகளாகச் சித்திரித்தி ருந்தது எனக்கு நினைவில் வந்தது. இவை எல்லாம் பழங்காலக் காவிய நாயகர்களின் வீர தீரச் செயல்களைப் போலவே என்னுள் பதிந்து, இராணுவ வீரர்களையும் காவிய நாயகர்களாகவே நான் உருவகப்படுத்தி வைத்திருந்தேன். இந்த உணர்வையே நான் அவரிடம் எதிர் ஒலித்தேன்.

"எனக்கு இந்த வேல மேல மதிப்பும் இல்ல... பற்றும் இல்ல சார்... ஏதோ சேந்துட்டேன்... ஆச்சு... இருபத்து இரண்டு வருஷமாச்சு... இந்த வருஷத்தோட நான் வேலைய வுட்டுடப் போறேன்."

சலிப்புடன் சொல்லி நிறுத்தினார் அவர்.

"என்ன... இப்படி சொல்றானேன்னு பாக்கறீங்களா? சார்... நான் ஒண்ணும் இந்த நாட்டுக்குச் சேவை செய்யணும்னு இந்த வேலை யிலே சேரல்லே...

...ஊம்... இருவத்தைஞ்சி வருஷத்துக்கு முன்னாலே எனக்கு அப்போ பதினாறு, பதினெட்டு வயசு இருக்கும்னு வச்சிக்குங்கோ... என்னோட தகப்பனார் இருந்தவரைக்கும் குடும்பம் எப்படியோ

நடந்திச்சி... அவருக்குப் பின்னால நான்தான் இருந்தேன்... எனக்குன்னு அவரு ஒண்ணும் சேத்துவச்சுட்டுப் போயிடலே... எங்கம்மாவைத் தவிர...! என் கையிதான் எனக்குதவின்னு நான் தெரிஞ்சிக்கினதுக்கப்புறம் நான் வேலை தேட ஆரம்பிச்சேன் சார்... என் தகப்பனார் இருந்தவரைக்கும், வாழ்க்கைன்னா என்னான்னு எனக்குத் தெரியாது... என் குடும்பத்தை நான்தான் நிர்வகிக்கணும்னு வந்துட்டப்போதான் அது எவளோ சிரமம்னு எனக்கு தோணிச்சி... அப்போல்லாம் (தன் உடம்பைக் காட்டி) இதைவிட ஸ்டாங்கா இருப்பேன். பகல் நேரமெல்லாம் எங்கேயாவது கூலி வேலை செய்வேன். விறகு பிளப்பேன். மண் சுமப்பேன்... வண்டி ஓட்டுவேன்... ராவாச்சுன்னா கெடச்சத எங்கம்மா கையில கொடுத்துட்டு, அவங்க போட்டதை துன்னுட்டு முடங்கிப் போயிடுவேன் சார்...'

இந்த இடத்தில் அவர் என்னவோ பற்றிச் சிந்திக்கிறார். தன் நெற்றியை அழுந்தத் தேய்த்துக் கொள்கிறார். ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொள்கிறார். ஜன்னலுக்கு வெளியே ரயிலோடு தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் பச்சை வயல்களையும் மொட்டைப் பாறைகளையும் ஆழ்ந்து கவனிக்கிறார். புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்டின் சாம்பலை விரலால் தட்டிவிடுகிறார். சிவந்த நெருப்பை உற்று நோக்குகிறார். கொஞ்சம் இருமுகிறார். எழுந்து சென்று ஜன்னலில் வழியே துப்பிவிட்டு வந்து உட்காருகிறார்.

நானும் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டேன்.

அவர் தொடர்ந்து பேசினார்...

"அப்போல்லாம் நாங்க இருந்த வீடு வீடே இல்ல சார்... அது ஒரு நரகம்... ஊர்ல உள்ள சாக்கடைங்கல்லாம் வந்து கூடற இடம் அது... அங்க இருந்த குடிசைங்கல்ல ஒரு குடிசை எங்களது... அங்க இருக்கிற எல்லா ஆம்பிளைகளும், ராவாச்சுன்னா பொம்புளைங்களும் அங்க தான் 'வெளிக்குப்' போவாங்க... அந்தச் சாக்கடைத் தண்ணியிலதான் 'கால்' அலம்புவாங்க... ராவெல்லம் கொசு தூங்கவுடாது... எங்கெங்கிருக்கிற சொறி நாய்ங்கல்லாம் எங்க வூட்டைச்சுத்தித்தான் கொலைச்சுக்கினு கிடக்கும்... எல்லாப் பொறம் போக்குப் பன்னிங்களுக்கும், எங்க வாசல்லதான் படுக்கை..."

பகல்லேயெல்லாம் உழைச்சுட்டு வந்து, செத்த நேரம் நிம்மதியா படுக்கலாம்னா அதான் முடியாது சார். எப்படியாவது இதுக்கல்லாம்

ஒரு முடிவு காணணும்னு ராவெல்லாம் யோசிச்சு யோசிச்சு தலையே கனத்துப் போயிடும் சார். எங்கேயாவது ஒரு நல்ல வேலைக்குப் போகணும். மாசம் பொறந்தா சம்பளம் வாங்கணும்... அஞ்சோ, பத்தோ ஒரு சுத்தமான தெருவுல, ஒரு சுத்தமான வூட்ல, குடியிருக்கணும்னு ஆசை சார் எனக்கு. எப்போ பார்த்தாலும் எனக்கு, ஒரு நல்ல வீட்டைப் பத்தின சிந்தனைதான் சார். தெருவுல போய்க்கிட்டே இருப்பேன். ஓர் அழகான ஊட்டைப் பாத்தா அப்படியே நின்னுடுவேன். இந்த வீட்டுல நாம இருந்தா? நாலுகை தாவாரமும், சுத்தமான ஒரு லெட்ரினும், வழவழப்பான கல்லுவச்ச குளிக்கிற ரூமும் நல்லா காத்து வர்றமாதிரி ஒரு பெட்ரூமும்... தெறந்த மெத்தையும்... எப்படி இருக்கும்...

வெயிலெல்லாம் சாஞ்சப்புறம், நிம்மதியா குளிச்சிட்டு ஈஸிசேரைக் கொண்டு வந்து அந்தக் குறட்டில போட்டுக்கிட்டு உக்காந்தம்னா எப்...ப்...டி... இருக்கும்? அங்க அடுப்பங்கரையில அம்மா அப்பளம் பொரிக்கிற 'சொர்ர்ர்' சத்தம் என் காதில விழணும்... எறாவும் மீனும் வறுக்கிற வாசனை அங்கேருந்து எனக்கு வரணும், அதை மூக்கால இழுத்துவுட்டுட்டு— 'என்னாம்மா... சாப்ட வரலாமா'ன்னு நான் இங்கேந்து கத்தனும்... அதைக் கேட்டு அவங்க'செத்த இரேன்டா... கழுதை... சாப்பாட்டு ராமன்டா நீ' அப்படீன்னு சொல்லணும்னு...

சாருக்குச் சிரிப்பா இருக்கும்... நான் அப்படித்தான் சார் நெனச்சேன்... நீங்க பெரிய விஷயங்களா நெனைப்பீங்க... எனக்கு இதுதான் சார். அப்போ பெரிசா இருந்துச்சி. இப்பவும் பெரிசா இருக்கு...

இதுக்காகத் தான் சார், நான் ஒரு நல்ல வேலையைத் தேடி அலைஞ்சேன்... அப்போ தான் நம்ம இராணுவத்தில் ஆள் சேக்குறதுக்குச் சில ஆபீஸர்லாம் நம்ம ஊருக்கு வந்தாங்க... வேளா வேளைக்குச் சோறு போட்டு நல்ல சம்பளமும் தர்ரதா சொன்னாங்க சார். நானும் நம்ம கஷ்டத்துக்கு விடிவு காலம் வந்துட்டுதுன்னு சொல்லி இராணுவத்தில் சேந்துட்டேன். எங்கெல்லாமோ அழைச்சுக்கிட்டு போனாங்க சார். முதல்ல, ஆரம்பத்தில சம்பளம்னு ஒன்னும் கெடைக்கல்ல. பின்னால ஏதோ கொடுத்தாங்க. நான் எதிர் பார்த்ததை விடவும் கொஞ்சமான சம்பளந்தான். என்ன பண்றது. சேந்தாச்சு. அதாவது தர்ராங்கலேன்னு நான் அதுல ஒரு தம்பிடி கூடத் தொடாமே எங்க அம்மாக்கு அனுப்பிச்சுடுவேன் சார். என்ன பண்ணுவியோ, எப்டி சாப்பிடுவியோ, நான் அனுப்பற பணத்தை

யெல்லாம் சிக்கனமா இருந்துகிட்டு சேத்துவையுன்னு அடிக்கடி எங்க அம்மாவுக்கு எழுதுவேன்.

அவங்க வயத்தைக் கட்டி வாயைக் கட்டித்தான் சேத்து வச்சுக்கிட்டு வந்தாங்க.

சார்... நான் மிலிட்டிரியில் சேர்ந்த எட்டாவது வருஷந்தான் எங்க அம்மா செத்தாங்க. அவங்க செத்த சேதி கூட எனக்கு ஆறு மாசம் சென்றுதான் தெரியும். அப்போ எங்க 'குரூப்' பர்மா பார்டர்லே பெரிய காட்டுக் கிடையில இருந்துச்சு. லெட்டரோ மத்த கரஸ்பான்டன்ஸோ எங்களுக்கு அவ்ளோ சீக்ரம் கிடைக்காது. அவங்களுக்குக் கடைசியா கொள்ளி வைக்கக்கூட என்னாலே முடியல்லே. அது கெடக்கு...

என்னா கேட்டிங்க?... எனக்கு கல்யாணம் ஆச்சான்னா? அதுதான் சொல்ல வந்தேன். 1960லே தான் சார் எனக்கு கல்யாணம் ஆச்சு. ஒரு லீவில் வந்திருக்கப்போ, எங்க தூரத்துச் சொந்தத்துல ஒரு பொண்ணு இருக்கு, கட்டிக்கோன்னு தொந்தரவு பண்ணாங்க சார் எனக்குச் சொந்தக்காரங்கல்லாம்.

எனக்கும் அப்போ ஒரு 'பொண்ணு' தேவைப்பட்டதாத்தான் தோணிச்சு சார். சினிமாவுக்கோ திருவிழாவுக்கோ நான் போற சமயத்திலேல்லாம் நெறைய பொண்ணுங்களைப் பக்கத்துல நின்னு பாக்கவும் அவங்க வாசனையை முகர்றதுக்கும் எனக்கு 'சான்ஸ்' கெடச்சிருக்கு சார். அந்த மல்லிகைப் பூவோட வாசனையும், மொட மொடன்னு பெட்டியிலே பச்சைக் கல்பூரம் போட்டு, திருவிழாக் குன்னு எடுத்துக் கட்டிக்கிட்டு வந்த பொடவையோட வாசனை யும், கசகசன்னு வேர்த்து அவங்க நெத்தியிலேயும் கழுத்து மடிப்பிலேயும் இருந்து வழியற வேர்வையோட வாசனையும், என்னை ரொம்பவும் மயக்கி இருந்துச்சி சார்.

"எனக்கு உங்ககிட்ட என்னென்னவோ சொல்லணும் போல இருக்கு. தவறா நெனைச்சுக்காதீங்க சார்."

இந்த இடத்தில் அவர் பெட்டியைச் சுற்றி நோட்டம் விடுகிறார். எதிரே என் நண்பர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார். மூலையில், ஒரு நாட்டுப் புறத்துக் கிழவி சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள். அவர் தொடர்ந்தார்—

"கல்யாணம் ரொம்ப சிம்ப்பிளா கோயில்லே ஆச்சு சார். அவளுக்கு என் மனைவிக்கு அப்போ பதினைஞ்சு பதினாறுதான்

இருக்கும். ரொம்பச் சின்னப் பொண்ணு. நின்னா என் இடுப்புக்குத் தான் வருவா."

இந்த இடத்தில் அவர் சற்று நிறுத்தி அந்த நாள்களை தம் நினைவுக்கு மீண்டும் கொண்டுவர முயன்றார். கடுமையான அவர் முகம் சற்று மென்மை அடைகிறது. நான் அவரை முதலில் பார்க்கும் போது கறுப்பாக இருந்த அவர் சிவப்பாக மாறிவிட்டாரோ — எனக்குச் சந்தேகம் வந்தது. கண்களை அரையாக மூடிக்கொண்டார். இடதுகை விரல்களால் தலைமயிரை மிக மென்மையாகக் கோதி விட்டுக் கொண்டார்.

சார்... எங்க குடும்ப வாழ்க்கையைப் பத்தி இப்ப யோசனை பண்றப்போ, நான் ரொம்ப கொஞ்சமாத்தான் அதை அனுபவிச்சி ருக்கேன்னு தோணுது... வருஷத்துல ரெண்டு மாசம் மூணு மாசம் லீவில் வர்ரதும் அவசர அவசரமா பிளாட்பாரத்தில் நின்னு பேசற மாதிரி பேசிட்டுப் பறக்கிறதுமா நான் வாழ்ந்திருக்கேன்சார்... 'கேம்ப்'லேந்து வீடு வந்து சேர்றதுக்கு நாலு நாளும் திரும்பி போய்ச் சேர்றதுக்கு நாலு நாளுமா எட்டு நாளூ ரயில்லியே போயிடும் சார்... மீதி இருக்கிற கொஞ்ச நாளுக்குள்ளியே நாங்க அவசர அவசரமா வாழ்ந்துடணும் சார்...

அவளுக்கு என் சம்சாரத்துக்குத்தான்— சந்தோஷம்னா சிரிக்கிறதோ துக்கம்னா அழுது கொட்டறதோ கெடையாது சார் அவகிட்டே... பெட்டி படுக்கையோட லீவுன்னு சொல்லிட்டு ஒருநாள் போய் அவ முன்னால் நிப்பேன்... 'வாங்க'ன்னு அவ இயல்புக்கு மேலயே கொஞ்சம் சத்தம் போட்டுச் சொல்லுவா. அப்படியேரெண்டு நிமிஷம் செலையாட்டம் நிப்பா. அவ்ளோதான். அடுத்த நிமிஷத்திலேந்து அப்படியே பம்பரமா ஆயிடுவா சார். நான் பேசறதுக்கு அவசியமே இருக்காது. நான் நெனைக்கிறதையே அவளும் நினைப்பாபோல இருக்கு.

ராவில் அவளும் நானும் ஒன்னா சேர்ந்து படுத்திருக்கப்போ, அந்த என் கற்பனை வீட்டைப்பத்தின சிந்தனையே என் நெஞ்சை வந்து அடைச்சுக்கும் சார்.

அந்தச் சின்ன சிம்னி வெளக்கு வெளிச்சத்திலே மேலே இருக்கிற கீத்தும், மஞ்சள் முழிங்களும், என் கண்ணில பாடும். விரிஞ்ச ஆகாயமும், நட்சத்திரமும் என் கண்ணில தெரிஞ்சா... எவ்ளோ சந்தோஷமா இருக்கும். ஒவ்வொரு சமயமும் இத அவகிட்ட நான் சொல்றப்போல்லாம், அவ ஒன்னும் பதிலே

சொல்லமாட்டா சார். கொஞ்ச நாழி ஆனப்புறம், சூடா என்மேல பொட்டுன்னு விழும். ஆமா... அழுவா, 'எதுக்குடீ அழறன்'னா பாவி அதுக்கும் பதில் சொல்லமாட்டா சார்...

உம்... என்ன சொல்லிக்கிட்டு வந்தேன்... ஆ... இப்படித்தான் எப்பவும்... ஏதாவது ஆசைப்பட்டுக் கேட்டா வாங்கித் தரலாம்னா... கேட்டா, சும்மா சிரிச்சு மழுப்பிடுவா சார். ஏம்மா உனக்கு ஆசையே கெடையாதான்னு ஒருநா கேட்டேன்... ஊகும்... எனக்கு ஆசை நீங்கதானுட்டா. நான் இன்னா சார் செய்யறது...

ஒவ்வொரு தடவையும் ஊருக்குப் போயி திரும்பறது பெரிய கொடுமை சார். நான் ஊருக்கு கிளம்பறன்னு ரெண்டு நாளுக்கு முன்னாயே அவளுக்குத் தெரிஞ்சுடும் சார். அப்படியே சட்டுணு ஒடுங்கிடுவா... ஓடிக்கிட்டே இருக்கிற மெஷின் டக்குன்னு நின்னா எப்படி ஒரு காமா இருக்கும். அது மாதிரி... ஏண்டி அழுணும்னா அழுது தொலையேன்னு சொன்னா அழவும் மாட்டா சார்...

ஆச்சு; எத்தனையோ மாமாங்கம் ஆனது மாதிரி தோணுது சார்... நான் ஊருக்குத் திரும்பிட்டேன்னா அவ ஒரு நெல்லு மிஷின்லே வேலை செய்யப்போயிடுவா. சாயந்தரமா திரும்பி வர்ற போது அரைப்படி ஒரு படின்னு ஏதாவது கூலியாக் கிடைக்கும். அத கொண்டு அவ வயித்தை அவ கழுவிக்கிறா.. நான் அனுப்பற பணத்தையெல்லாம் சேத்து வச்சுக்கினே வந்திருக்கா சார்.

போனதடவை வந்திருக்கும் போது சொன்னா எனக்கே ஆச்சரியமா இருந்துச்சி சார்... ஏறக்குறைய ஆறாயிரம் சேர்ந்திருந்தது. எனக்குச் சந்தோஷம் தாங்க முடியல சார்... அந்தப் பணக்காரி வெளுத்து, சாயம்போன, பல இடங்கல்ல ஒட்டுப் போட்ட பொடவையைக் கட்டிக்கிட்டு—

அந்தப் பணம் பூராவையும் அவளுக்கே பொடவை யாவும், நகையாவும் செஞ்சுப் போட்டுடனும்னு எனக்குத் தோணுச்சி சார்...

ஒரு நல்ல நாளில், நானும் அவளும், கூட ரெண்டு ஆளை வச்சுக்கிட்டு இத்தனை வருஷமா நாங்க குடியிருந்த இடத்துக்கு மேக்கால, நீங்க வரும்போது பாத்திங்கல்லே அந்தப் பாறைக்கு அடியிலேயே வேலையை ஆரம்பிச்சோம் சார்... அந்தப் பாறையை ஒடைச்சு சம நிலமா ஆக்கிறதுக்கே ரூபா ஒன்னா யிட்டுது சார்... வேலை நேரம் போக, கூலி ஆளுங்க போனப் புறம்கூட நானும் அவளும் வெளக்க வச்சுக்கிட்டு வேலை செஞ்சுக்கினு இருப்போம்.

வெயிலா... மழையா... எந்த வெயில் எங்கள என்னா செஞ்சுட்டுது... எந்த மழை எங்கள அசைச்சுக்க முடிஞ்சுது ஒரே வெறிசார்... ஒரே வெறியில வீடு எழும்பிச்சு சார்... கையில இருக்கிற காசெல்லாம் தீந்தப்புறம் கூட அங்க இங்க பொறட்டி ஒரு வழியா வீட்டைக் கட்டி முடுச்சுட்டோம் சார்.

கடைசில உங்க ஆசை நிறைவேறிப் போச்சில்லையா... என்று எனக்கிருந்த மனத்திருப்தியோடு ஆனந்தத்தோடும் நான் கேட்டேன்...

"இல்ல... சார்... இல்லே..."

"ஏன்... ஏன்"

"அந்த வீட்ட இடிக்கச் சொல்லிக் கவர்ன்மென்ட் உத்தரவு போட்டிருக்கான் சார்... இருபது வருஷமா என் உழைப்பை யெல்லாம் கவர்ந்துகிட்டு என்னை எதுக்கும் உதவாத சக்கையாக் கிட்ட இந்தக் கவர்ன்மென்ட் என் இரத்தத்திலேயும், வேர்வை யிலேயும் கட்டின இந்த வீட்டை இடிக்க எனக்கு உத்தரவு போடறான் சார்..."

பொல பொலன்னு நீர் வழிந்தது அவர் கண்களில்.

"என்ன காரணம் சொல்றாங்க அந்த வீட்டை இடிக்கச் சொல்லி..." நான் கேட்டேன்.

"அவங்க ரோடு போடப் போறாங்களாம்... அவங்க போடற ரோடு என் வீட்டு மேலத்தான் போவணுமாம்... எனக்கு முன்னாலி யும் பின்னாலியும் எத்தனையோ பேர் வீடு கட்டித்தான் இருக்கான்... அவங்களுக்கெல்லாம் அங்க ஆள் இருக்கு... எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதுக்குத் தகுந்த மாதிரி சட்டை போட்டுக்கிறானுங்க... நாம ஏழைதானுங்க... நம்மளது அம்பலம் ஏறுமா...?"

"நஷ்ட ஈடு..."

"நஷ்ட ஈடா?... எந்த நஷ்டத்தை சார் இவன் பார்த்தான்... எது நஷ்டம்னு இவனுக்குத் தெரியும்... எதை சார் இவனாலே புரிஞ்சுக்க முடியும்..."

"நீங்க உங்க ஆபீஸர்ஸ் மூலமா டிரை பண்ணிப் பாருங்களேன்... உங்களுக்கெல்லாம் சலுகை இருக்கும் சார்..."

"எவன் சார் இதையெல்லாம் கவனிக்கிறேங்கிறான்... இதை ஒரு பெரிய விஷயமா எடுத்துப் பேச எவனும் தயாரா இல்ல... ஊர்ல பெரிய மனுசன்னு சொல்லிக்கிட்டு இருக்கிற அயோக்கியன்

ஒருத்தன் தன் வீட்டு மேல நியாயமா போக வேண்டிய ரோட்டை என்னை மாதிரி பஞ்சைங்க, பராரிங்க, மேல திருப்பிவிடறான்... அவனுக்கு இந்த நாட்டுல பாதுகாப்பு இருக்கு சார்..."

"என்னதான் முடிவு பண்ணி இருக்கீங்க..."

"அதுக்குத்தான் போய்க்கிட்டிருக்கேன்... 'செர்வீஸ ராஜினாமா பண்ணிட்டு வரப்போறேன்... இந்த நாட்லே அறுபது கோடி பேருங்க நிம்மதியா அவங்க அவங்க வூட்ல வாழணும்கிறதுக்காக இருபது வருஷம் வாழ்ந்திருக்கேன் சார்... ஆனா எனக்கொரு வீடு... ஆனா, நான் இத்த விட்டுறதா இல்ல சார்... நான் நியாயம் கேட்கத்தான் போறேன்; பாத்துடுவோம் ஒரு கை."

அவர் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

சூரியன் உச்சிக்கு வந்து விட்டிருந்தது.

1984